சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:16.03.2023

வா.சா.1 – சக்திவேல்ராஜா த/பெ – ராமசாமி ராஜா

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வா.சா.ஆ.2 ன்படி நான் சொத்தின் சுவாதீனதாரர் ஆனால் சொத்தின் அனுபவம் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் வசம் வாடகை காலம் முடியும்வரை உள்ளது என்றால் சரிதான்.வாடகையை பொதுவாக ஆன்லானில் தான் செலுத்துவார்கள் என்றால் சரிதான். அதன்படி தான் எனக்கும் வாடகை ஆன்லைனில் RTGS படி செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல காசோலை மூலம் தான் செலுத்தினார்கள். நான் குடியிருக்கும் முகவரி 19 ராஜாஜி நகர், ICA காலனி, விருதுநகர் என்றால் சரிதான். 10.05.2019 ம் தேதி நான் பிரதிவாதி எனக்கு அனுப்பிய ரூ.8,800/–க்கான காசோலையை வாங்க மறுத்து அனுப்பிவிட்டேன் என்றால் சரிதான். அந்த காசோலை மற்றும் அட்வைஸ், திரும்பி வந்த போஸ்டல் கவர் இது தான் அது பி.வா.சா.ஆ.1 வரிசை( 3 எண்ணம்), 12.06.2019 ல் அனுப்பிய காசோலையை நான் திருப்பி அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல நான் ஒரு காசோலையைத்தான் திருப்பி அனுப்பினேன். அந்த காசோலையும் 19 ராஜாஜி நகர், ICA காலனி, விருதுநகர் எனது முகவரிக்குத்தான் அனுப்பப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 17.09.2019 ம் தேதியும் ரூ.8,800/–க்கு ஒரு காசோலை அனுப்பப்பட்டது என்றும் அது மறுத்துவிட்டதாக திரும்ப வந்துவிட்டது என்றால் சரியல்ல. தொர்ச்சியாக மாதம் மாதம் அனுப்பிய காசோலையை நான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் எனது வங்கி கணக்கை பிரதிவாதிக்கு தகவல்

தெரிவிக்காமல் முடித்ததால் தான் காசோலைகள் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆரம்பத்தில் RTGS மூலம் வாடகை செலுத்தி வந்ததால் பிரதிவாதியை வெறியேற்ற முடியாது என்பதை தெரிந்து கொண்டு வங்கி கணக்கை முடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 வாடகை ஒப்பந்தபடி பிரதிவாதிகள் எந்தவித வாடகை பாக்கியும் வைக்கவில்லை என்றும் இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்தவித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பெட்ரோல் பங்க் வைத்து நடத்துவதற்காகத்தான் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. பெட்ரோல் பங்க் நான் நடத்துவதற்கு சிவக்குமார் என்ற இந்தியன் ஆயில் அதிகாரி என் பெயரில் மாற்றி கொடுக்கிறேன் என்று வாய்மொழியாக நான் ஏலம் எடுத்தபின்பு கூறினார். நான் இதுபோல் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சட்டவிதிகளுக்கு உட்பட்டுதான் டீலர்சிப்பை நியமனம் செய்ய முடியும் என்றும் எனக்கு மாற்றி கொடுக்கமுடியாது என்றும் அவ்வாறு நான் கூறுவது போல எவ்வித நிகழ்வும் நடக்கவில்லை என்றால் சரியல்ல, சட்டவிதிக்குட்பட்டு மாற்றித்தருவதாக கூறினார். நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பெட்ரோலிய துறை அமைச்சகத்தால் டீலர்சிப் நியமணம் செய்ய பேப்பர் விளம்பரம் மற்றும் அறிவிப்பாணை வெளியிடப்பட்டு ஒவ்வொரு இடத்திற்கும் ஜாதி பிரிவு வாரியாக நியமனம் செய்யப்படும் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் தாவா இடத்தை அபகரிக்கும் எண்ணத்தில் தாவா இடத்திற்கு வந்து அங்குள்ள அலுவலர்களுக்கு இடைஞ்சல் செய்தேன் என்றால் சரியல்ல. உள்ளூர் அரசியல் வாதிகள் மற்றும் காவல்துறையினர் மூலம் பலவகைகளில் பிரதிவாதிகளுக்கும் அவர்களுடைய டீலருக்கும் இடைஞ்சல் செய்தேன்

என்றால் சரியல்ல. இடையூறுகளின் தொடர்ச்சியாகத்தான் விருதுநகர் மாவட்ட ஆட்சியருக்கு மனு கொடுத்து மனுவின் பேரில் எவ்வித விசாரணையும் இல்லாமல் டீலர்சிப் லைசன்ஸ் ஐ ரத்து செய்ததை எதிர்த்து WP.No.19111/2020 என்ற வழக்கு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் தாவா சொத்தில் டீலராக இருந்த பெண்மணி இறந்துவிட்டதால் சிவகாசி இந்தியன் ஆயில் லைசன்ஸ் புதுபிக்கும் அலுவலகத்தில் விசாரித்து அந்த இறந்துபோன பெண்மணியின் டீலர்சிப்பை ரத்து செய்வதற்காக மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேன். லைசன்ஸ் டீலர் பெயரில் வழங்கமாட்டார்கள் என்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் பெயரில் தான் வழங்குவார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. டீலர்சிப்பை ரத்து செய்ய மாவட்ட அதிகாரிக்கு அதிகாரம் இல்லை என்றால் இருதரப்பையும் அழைத்து பேசி தவறு என்பதால் ரத்து செய்தார். நான் சொன்னவாறு இருதரப்பையும் விசாரித்து லைசன்ஸை ரத்து செய்யவில்லை என்றும் IOC க்கு எந்த வாய்ப்பும் கொடுக்காமல் விசாரணையின்றி உத்தரவு பகரப்பட்டது என்றால் சரியல்ல லைசன்ஸ் திருமகள் என்பவர் பெயரில்தான் இருந்தது. நான் சொல்வது போல் திருமகள் பெயரில் லைசன்ஸ் இல்லை என்றும் IOC பெயரில் தான் லைசன்ஸ் இருந்தது என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியரின் உத்தரவு WMP.15981/2020 என்ற வழக்கில் பிறப்பித்த உத்தரவின்பேரில் தடைவிதிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் அதிகாரிகள் மீது பொய்யான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதன்பேரில் விருதுநகர் மாவட்ட குற்றபிரிவில் குற்றஎண்.13/2020 ல் IOC அதிகாரிகள் சிவக்குமார் மற்றும் ராஜாராம் ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும்

அதன்பேரில் CRLOP.No.715/2021ல் மேற்படி முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்யப்பட்டு CRLMP.No.322/2021ல் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் என்னால் பெட்ரோல் பங்கை நடத்த முடியவில்லை என்ற எண்ணத்தில் பிரதிவாதிகளுக்கு பல வகைகளில் இடஞ்சல்கள் செய்தேன் என்றால் சரியல்ல. நான் எந்த நோக்கத்திற்காக தாவா சொத்தை வாங்கினேனோ அந்த நோக்கம் நிறைவேறாததால் பிரதிவாதிகள் மீது பொய்யான வழக்குகள் மற்றும் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் பெற்றுவிட்டால் அதிலுள்ள பெட்ரோல் பங்கை நானே நடத்தலாம் என்று தவறாக கருதிக்கொண்டு அந்த எண்ணம் நிறைவேறாததால் இந்த வழக்கு மற்றும் இதர வழக்குகளை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. IOC நிறுவனம் என்னுடைய இடத்தில் இருக்கும்வரை எனக்கு வாடகைக்கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். அவ்வாறு IOC நிறுவனமும் இதுவரை வாடகை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் ஒருமாதம் கூட அவர்கள் சரியாக வாடகை செலுத்தவில்லை. நான் IOC நிறுவனத்திற்கு தொிவிக்காமல் வங்கி கணக்கை முடித்துவிட்டதால் தான் உடனடியாக ஆன்லைன் பேமெண்ட் செய்யமுடியவில்லை என்றும் அதன்பின்பு காசோலை மூலம் வாடகை செலுத்தியதை நான் வேண்டுமென்றே மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.